[1969 செப்டம்பர் 13]

திருவொற்றியூர்-பொன்னேரி சாலையில் இரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம்

*294 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம்:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர்-பொன்னேரி சாலையிலுள்ள லெவல் கிராசிங்குக்கு மேல் மேம்பாலம் கட்டுகின்ற செயற்குறிப்பு ஏதேனும் இருக்கிறதா ?

(இ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அவ்விதச் செயற்குறிப்பு எதுவும் ஆலோசனையில் இல்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. கொளத்தூர் கோதண்டம்: சென்னைக்கும் நெல்லூருக்கும் இடையிலே ரயில்வே கேட் இருப்பதால் அதிகமான அளவுக்கு போக்குவரத்து பாதிக்கப்படுகிறது. மேலும் அங்கே ஆயில் ரிபைனரி போன்ற தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதால் இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நம்முடைய சர்க்கார் மத்திய சர்க்காரை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே சாதிக் பாட்சா: இதைவிட அதிகமான போக்குவரத்து உள்ள இடங்கள் இருக்கும் காரணத்தால் இதைத் தற்போது எடுத்துக் கொள்ள சாத்தியம் இல்லை என்று சொல்லப்படுகிறது.

கும்பகோணம் நகராட்சியில் கேளிக்கை வரி

*295 வினா—**திரு. நா. காசிராமன்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் நகராட்சி 1965-66-ம் ஆண்டில் கேளிக்கை வரி மீதான மேல் வரியை உயர்த்தியுள்ளதா ?

(இ) கும்பகோணம் நகராட்சி கேளிக்கை வரி மீது விதித்த மேல் வரி அதிகரிப்பை வருவாய்த்துறை வாரியம் தள்ளிவிட்டதா ?

(உ) நகராட்சி செயற்குறிப்பையும், முடிவையும் தள்ளி வைத்து வருவாய்த் துறை வாரியம் பிறப்பித்த ஆணை செயல்படுவதை அரசு தடுத்து நிறுத்தி வைத்துள்ளதா?

(எ) வருவாய்த்துறை வாரியம் எடுத்த முடிவின் மீது அரசு தடுப்பு ஆணை பிறப்பித்திருந்தபோதிலும், திரைப்பட மாளிகை அதிபர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கேளிக்கை வரி மீதான மேல் வரியை கும்பகோணம் வணிக வரி அதிகாரி நகராட்சிக்குக் கொடுக்க மறுத்தாரா ?

(ஐ) அவ்வாறு அவர் நிறுத்தி வைத்துக் கொண்ட கேளிக்கை வரித் தொகையும் கேளிக்கை மேல்வரித் தொகையும் எவ்வளவு ?